**இலங்கை கிரிக்கெட் - 2018**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கிரிக்கெட்டின் (“இலங்கை கிரிக்கெட்”) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, நிதியமாற்றங்களிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து இலங்கை கிரிக்கெட்டின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சங்கத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது இலங்கை கிரிக்கெட்டினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

இலங்கை கிரிக்கெட்டின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

---------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி இலங்கை கிரிக்கெட்டின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக இலங்கை கிரிக்கெட்டின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என

நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது இலங்கை கிரிக்கெட்டின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது இலங்கை கிரிக்கெட்டின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க இலங்கை கிரிக்கெட் செயற்படுகின்றதா எனவும்
- இலங்கை கிரிக்கெட் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- இலங்கை கிரிக்கெட் வளங்களை சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 113 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தினாலும் நிதி நிலைமை கூற்றிலும், இலாப நட்டக் கூற்றிலும் விரிவான வருமானக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் காணப்படும் ஒவ்வொரு உருப்படிக்கும் குறுக்கு குறிப்பு மேற்கொள்ள வேண்டிய போதிலும் சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் வருடாந்த விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் கூட்டிணைந்த தொடர்பாடலுக்காக முறையே 1,516,290,000 மற்றும் ரூபா 77,419,743 இற்காக கிரிக்கட் நிறுவனத்தின் பதிவாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் பிற்போடப்பட்ட வருமானமான ரூபா 10,703,573 இற்காக நிதி நிலைமைக்கூற்றில் பதிவுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் நிதிநிலைமைக் கூற்றுக்களில் இரண்டுக்கும் மேற்பட்ட உருப்படிகளைக் கொண்ட நிலுவைகள் தனித்தனி குறிப்பாக வெளியிடப்படும் | ஒரு நிறுவனம் ஒவ்வொரு பொருளின் குறுக்கு குறிப்பு நிதி நிலைமை கூற்று இலாபம் நட்டம் மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காணப்படும் எந்தவொரு தொடர்புடைய தகவலுக்கும் குறுக்கு குறிப்பு காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் ஒவ்வொரு சொத்தினதும் ஆயுட்காலம் மற்றும் எஞ்சிய பெறுமதியும் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,154,458,140 கிரயத்திலான ஆதனங்கள், பொறிகள் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் ஆதனங்கள், பொறிகள் உபகரணங்களின் ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாமையால் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றுக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அண்மையில் நாம் பரீட்சார்த்த செயற்திட்டமாக சொத்துக்களை மீள்மதிப்பீட்டு செய்வதற்கு மிள்மதிப்பீட்டு சபை நியமித்துள்ளளோம். இந்நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படவுள்ளது. | ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலமும் எஞ்சிய பெறுமதியும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் |
| (iii) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 67 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஒரு பொருளை எடுத்துச் செல்லும் அளவு அகற்றப்படுவதில் அடையாளம் காணப்படும் அல்லது அதன் பயன்பாடு அல்லது அகற்றலில் இருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாத போது. அது சொத்துக்களாக இனங்காண முடியாது. இருப்பினும், சொத்துக்கள், உபகரணங்களை அங்கீகரிப்பதற்கான கொள்கையை வெளியிடவில்லை | எதிர்கால நிதிநிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் அடையாளம் காணல் குறித்த விரிவான கொள்கையை நாங்கள் உள்ளடக்குவோம்˙. | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்கைகள் இனங்காணப்பட்டு அதன் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

----------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ஏனைய முற்பணங்களின் கீழ் ரூபா 5,845,788 தொகை இனங்காணப்படாத மீதியாக உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரை இம்மீதிகள் இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டதுடன் இந்த நீண்டகால. பழைய நிலுவைத் தொகையைப் பரீட்சிக்க ஒரு குழுவை நியமிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது. குழுவின் பரிந்துரை மற்றும் நிறைவேற்றுக்குழவின் அங்கீகாரத்தின் அடிப்படையில், தேவையான பதிவுகள் 2019 இல் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்கிளல் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (ii) | கண்டி கட்டுகஸ்தொட்டையில் அமைந்துள்ள 256 பேர்ச் அளவிலான வலகும்புறவத்த என்ற பெயருடைய கிரிக்கெட் வளாகமொன்றை ஆரம்பிப்பதற்கு காணி இலங்கை கிரிக்கட்டினால் 30 ஆண்டுகள் குத்தகை உடன்படிக்கையில் 2017 ஏப்ரல் 29 ஆந் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 30 ஆண்டுகளுக்காக செலுத்த | உங்களது ஆலோசணை நிறைவேற்றுக்குழுவில் பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் திருத்தங்கள் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும். | நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய குத்தகை கட்டணம் ரூபா 26.25 மில்லியனாக இருந்தது. அதற்கு மேலதிகமாக மேற்படி தவணைப் பணத்திற்கு ரூபா 25 மில்லியன் தொகை நன்கொடையாக குத்தகையாளரால் விஹாரைக்கு 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்ததுடன் அது வருமானத்திற்கு எதிராக சாட்டுதல் செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் மூலதன நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தன. | | |
| (iii) | 2018 ஆம் ஆண்டின் போது தென் ஆபிரிக்காவின் இலங்கைக்கான சுற்றுத் தொடருக்கு அனுசரணை உரித்திற்காக கிடைக்க வேண்டிய வருமானமான ரூபா 29,834,405 (USD 187,085) தொகை மீளாய்வாண்டில் வருமானத்தில் உள்ளடக்கி அனுசரணை கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய சந்தேகத்திற்குரிய மற்றும் முறையற்ற ஈடுபாடு காரணமாக அப்பணத்தை அனுசரணையாளர்களிடமிருந்து அறவிடுவது சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | முகாமைத்துவத்தினால் சோனி பிக்ஷர் நெட்வேர்க் இந்தியா (தனி) கம்பனிக்கு வகைகோரல் கடிதம் அனுப்பியுள்ளதுடன் கம்பனியின் நிலுவை தொகையை அறவிடுவதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுப்பதற்கு சட்டப்பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கிளல் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் ஏனைய கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,213,944,841 பெறுமதியானது மகிந்த ராஜபக்ச சர்வதேச கிரிகெட் விளையாட்டு அரங்கு நிர்மாணம் தொடர்பாக இலங்கை துறைமுக அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையினை உள்ளடக்கியிருந்தது. எனினும் இப்பொறுப்பானது துறைமுக அதிகார சபையினால் உறுதிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களிலுள்ள குறிப்பு இல 29 இற்கு இணங்க மொத்த பொறுப்பும் இலங்கை | இது அரச மானியமாக கருத்திற் கொள்வதற்கு அங்கீகாரத்தை தருமாறு பொது திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக பதில் இதுவரை கிடைத்திருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்கிளல் தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் 2017 ஒக்தோபர் 25 ஆந் திகதிய 17/1765/737/028 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் அதற்கு தேவையான நிதியை மக்கள் வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்தொகையிலிருந்து தீர்வுசெய்வதற்கு இலங்கை அரசாங்கத்திற்காக நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சு மற்றும் மக்கள் வங்கிக்கு இடையே உடன்படிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள எவ்வித நடவடிக்கையும் நிறுவனத்தினால் மீளாய்வு ஆண்டு இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கை

---

| விடயம் | நிதிக்கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | அண்மித்த அறிக்கை களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா | வேறுபாடு<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதிக்கு செலுத்த வேண்டியவை | 13,573,845 | 13,953,844 | 379,999 | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதிக்கு வேறுபாடு இணக்கம் செய்வதற்கு சீராக்கம் தொடர்பாக விரிவான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு 2019 வேையான பதிவுகள் மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களில் இனங்காத மீதிகளை இனங்கண்டு சீராக்கம் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை<br>ரூபா | நிச்சயமற்றதாக இருந்த காலம்<br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| திருப்பிச் செலுத்த வேண்டிய களியாட்டவரியாக காலி மாநகர சபை | 5,585,673 | 2 ஆண்டுகளுக்கு மேல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. இது தொடர்பாக முகாமைத்துவத்திற்கு தெரியப்படுத்தப்பட்டதுடன் காலி மாநகர சபையால் கோரப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது புத்தகங்களில் தேவையான பதிவுகள் மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுக்களில் இனங்காத மீதிகளை இனங்கண்டு சீராக்கம் செய்வதற்கு உரிய வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகளின்மை

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | பெறவேண்டிய அனுசரணை | 36,820,238 | பெற வேண்டியவற்றிற்கான உறுதிப்படுத்தல்கள் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. முகாமையானது இந்த நிலுவையான மீதிகளை ஆராய்ந்து பார்க்க குழுவொன்றை நியமனம் செய்து அக்குழுவின் பரிந்துரையுடன் நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரத்துடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2019 இல் தேவையான பதிவுகள் மேற்கொள்ளப்படும். | மீதிகளுக்கான உறுதிப் படுத்தல்களுக்காக கிடைக்க வேண்டிய மீதிகள் தொடர்பான உறுதிப் படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | ஏனைய கடன்பட்டோர் | 10,870,901 | பெற வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப்படுத்து வதற்காக ஏனைய கடன்பட்டோரின் உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iii) | முற்பணம் கடன் அட்டை | 1,829,153 | பெற வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப்படுத்து வதற்காக முற்பணக் கடன் அட்டைதொடர்பான உறுதிப்படுத்தல் கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (iv) | ஏனைய முற்பணங்கள் | 11,620,076 | பெற வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக ஏனைய முற்பணங்கள் தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (v) | பெற வேண்டிய களியாட்ட வரி | 4,663,681 | பெற வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக களியாட்ட வரி தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (vi) | வெளிநாட்டு கிரிக்கட் சபைகளிலிருந்து பெறவேண்டியவை | 42,810,291 | பெற வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக வெளிநாட்டு விளையாட்டு சபைகளிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (vii) | செலுத்த வேண்டிய பரிசுப் பணம் | 56,649,636 | செலுத்த வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக செலுத்த வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (viii) | சர்வதேச கிரிக்கட் கவுன்சில் | 88,338,882 | பெற வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக சர்வதேச கிரிக்கட் கவுன்சில் இடமிருந்து கிடைக்க வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ix) | ஏனைய செலுத்த வேண்டியவை | 296,500,268 | செலுத்த வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக ஏனைய செலுத்த வேண்டிய தொகை தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (x) | முற்பணங்கள் - போட்டி முற்பணம் | 2,106,403 | உறுதிப்படுத்தல் மற்றும் விரிவான அட்டவணை | கொடுக்கல் வாங்கல் எங்கே கட்டளை இடப்பட்டது என மூல ஆவணங்களுடன் பரீட்சிக்கப்பட்டு பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக போட்டி முற்பணக் கட்டுநிதி தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (xi) | வைப்புக்கள் - பொது | 2,895,905 | சுயாதீன உறுதிப்படுத்தல் | ரூபா 11,364,805 தொகையில் ரூபா 8,468,900 தொகை இலங்கை மின்சார சபைக்கு உரித்தாகும். | பொது வைப்பு மீதிகளை உறுதிப்படுத்து வதற்கு தேவையான உறுதிப் படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |
| (xii) | முற் கொடுப்பனவுகள் | 13,943,987 | விரிவான அட்டவணைகள் | வருடாந்த கொடுப்பனவாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு களிலிருந்து இக்கணக்கு கொண்டுள்ளது. இவை காலப்பகுதிக்குள் காலக்கழிவு செய்யப்படும். | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக முன்னைய கொடு:ப்பனவு தொடர்பான உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (xiii) | செலுத்த வேண்டிய வியாபாரக்கடன் | 22,251,316 | மூன்றாம் தரப்பு உறுதிப்படுத்தல் | மொத்த மீதியான ரூபா 172,474,317 தொகையில் ரூபா 150,223,002 பின்னர் 2019 இல் தீர்வு செய்யப்பட்டுள்ளது. | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக செலுத்த வேண்டிய கடன் தொடர்பான உறுதிப்படுத்தல் கள் மற்றும் விரிவான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (xiv) | அட்டுறு செலவினங்கள் | 9,717,265 | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு | இத்தொகை 2013 ஆம் ஆண்டிற்கு முன்னரான காலப்பகுதிக்கு உரியதாகும். கொடுக்கல் வாங்கல் எங்கு நடைபெற்றதென மூல ஆவணங்கள் அண்மித்த வகையில் கண்டு பிடித்து கணக்குகளில் தேவையான பதிவுகள் மேற்கொள்ளப்படும் | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக விரிவான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (xv) | பெற வேண்டிய வரிகள் | 349,879,316 | விரிவான அட்டவணைகள் மற்றும் காலப்பகுப்பாய்வு | இது தொடர்பாக எமது வரி மதியுரையாள ரினால் பணி ஒப்படைப்பு வழங்கி அவர்களின் இறுதி அறிக்கையுடன் தேவையான சீராக்கம் செய்யப்படும். | மீதிகளை உறுதிப் படுத்துவதற்காக விரிவான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

### 1.6.1 பெற வேண்டியவை தொகை

---

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 20,237,784 கூட்டுத்தொகையான பெறவேண்டிய அனுசணை மீதிகள் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டன. | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | வெளித்தரப்பினரிடமிருந்து பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 1,162,080 ஆன பெறவேண்டிய | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | வெளித்தரப்பினரிடமிருந்து பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நுழைவுச்சீட்டு விற்பனை மற்றும் ரூபா 243,500 கூட்டுத்தொகை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாமல் காணப்படும் மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | வேண்டும். |
| (iii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,833,093 மற்றும் ரூபா 1,960,274 கூட்டுத்தொகையான ஏனைய 11 கடன்பட்டோர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகள் முறையே 1 ஆண்டிற்கும் 2 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டது. | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. | வெளித்தரப்பினரிடமிருந்து பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | 2018 திசெமம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட பெறவேண்டிய ரூபா 4,663,681 ஆன களியாட்ட வரியினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகை 2015 ஆண்டிற்கு முன்னர் காலப்பகுதிக்குரிய மீதிகளுடன் கூடியதாகும். எமது கோரலுக்கு உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களிடம் வினவப்பட்டது. இணக்கப்பாட்டிற்கு வந்தவுடன் தேவையான குறிப்புக்கள் கணக்கு பதிவேடுகளில் பதிவு செய்யப்படும். | வெளித்தரப்பினரிடமிருந்து பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓராண்டிற்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 14,057,572 தொகையான செலுத்த வேண்டிய மீதிகள் மற்றும் ரூபா 4,727,737 தொகை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்ட ஏனைய மீதிகள் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டது. | ரூபா 15,472,618 தொகையான நிலுவை மீதிகளில் ரூபா 1,415,046 தொகை 2019 ஆம் ஆண்டில் தீர்வுசெய்யப்பட்டுள்ளது. | வெளி தரப்பினருக்காக செலுத்த வேண்டிய தொகை தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 1.6.3. முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2008 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதியில் ரூபா 114,677,789 தொகையான போட்டி முற்பணங்கள் மற்றும் கிரிக்கெட் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்ட 2007 தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 83,615,044 ஆன நிர்மாண முற்பண முற்பணம் அறவிடப்படாமல் தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | உங்களது அவதானிப்பு குறித்துக் கொள்ளப்பட்டது. முகாமையானது இந்த நிலுவையான மீதிகளை ஆராய்ந்து பார்க்க குழுவொன்றை நியமனம் செய்து அக்குழுவின் பரிந்துரையுடன் நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரத்துடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். 2019 இல் தேவையான பதிவுகள் மேற்கொள்ளப்படும். | முற்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.7 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய நபர் தொடர்பாக வெளிப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கிரிக்கட் நிறுவனம் வரையறுக்கப்பட்ட கிரிக்கட் ஏட் (உத்தரவாதம்) கம்பனி பெயரில் கம்பனியொன்று ஸ்தாபிக்கப்பட்டு அதற்காக வருடாந்தம் ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு செய்வதற்கு இலங்கை கிரிக்கட் நிறைவேற்றுக்குழு அங்கீகாரம் வழங்கியது அதில் புண்ணிய கருமங்களுக்காக மற்றும் சமூக பொறுப்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவுதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் இது தொடர்பன விபரங்கள் இலங்கை கிரிக்கட் நிறுவனம் தொடர்புடைய தரப்பினர் தொடர்பில் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக வெளிப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் பதவியணியனின் 07 அங்கத்தவர்கள் இலங்கை கிரிக்கட் எய்டின் பணிப்பாளர்கள் ஆவர். அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் இது தொடர்பாக வெளிப்படுத்தப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இன் பிரகாரம் இதன் விபரங்கள் இலங்கை கிரிக்கட்டின் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பில் வெளிப்படுத்து வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,149,937,564 ஆன மிகையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு மிகை 2,118,960,664 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 30,976,900 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. செலவினம் ரூபா 1,138,131,923 ஆல் அதிகரித்த போதும் வருமானம் ரூபா 1,160,301,204 ஆல் அதிகரித்திருந்தமை மற்றும் வரிச் செலவினம் ரூபா 1,057,190 ஆல் குறைவடைந்தமை அந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

------------------------------------------

### 3.1 மனித வள முகாமைத்துவம்

------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டிற்குரிய இலங்கை நிறுவனத்திலிருந்து விலகிய 17 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,080,825 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இத்தொகை 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் நிறுவனத்தலிருந்து விலகிய பதவியணிக்குரியதாக இருந்தது. | விலகிய உத்தியோகத்தர் களிடமிருந்து அல்லது பிணையாளிகளிடமிருந்து கடன் மீதிகளை அறவிடுவதற்கு செயற்பட வேண்டும். |